# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 17, 2026 | Weekly E-paper ● January 10, 2026



# கலைகள் சிறந்த தமிழ்நாடு!

சுப. வீரபாண்டியன்

## ‘போகி’யாகப் போனது பா.ஜ.க! ‘பொங்கல்’ஆக இனித்தது தி.மு.க!

எழில். இளங்கோவன்

## மின்னுவதெல்லாம் பொன்னல்ல

தலையங்கம்

## அறப்போராட்டம் தொடரும்! அறிஞர் அண்ணா சூளுரை!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜனவரி 17, 2026 Weekly E-paper ● January 10, 2026


# கலைகள் சிறந்த தமிழ்நாடு!

**சுப. வீரபாண்டியன்**



பறை நம் இசை!

பறை நம் உணர்வு!

பறை நம் முழக்கம் !

அந்தப் பறையை முழக்கி, சென்னை சங்கமம் நிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொங்கலுக்கு முதல் நாள் சென்னை, எழும்பூரில் தொடக்கி வைத்த போது, அந்த மேடையின் நீள, அகலம், எழிலார்ந்த வடிவம், எடுப்பான தோற்றம் என மலைக்க வைத்த நிலை கண்டு அரங்கமே மகிழ்ந்தது, எழுந்தது, அந்தப் பகுதியே அதிர்ந்தது!



தமிழர்களின் கலை உலகும், இசை அழகும் எவ்வளவு விரிந்து பரந்தவை என்பதை அன்றைய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின. திரை அரங்கில், அதுவும் 70 எம்.எம். திரைகளில் மட்டுமே காணக்கூடிய கண்கொள்ளாக் காட்சிகளை அந்த அரங்கில் அமர்ந்திருந்த அனைவரும் கண்டு களித்தனர் !

முத்தமிழும் ஒத்து விளையாடிய அன்றைய தொடக்க விழாவிற்குத் தொடக்கமாய் இருந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ! அவர் காட்டிய வழியில் நின்று, இயல், இசை, நாடகக் கலைஞர்களின் ஏற்றமிகு கலைத்திறனைநாடேபோற்றும்வகையில்அரங்கேற்றியவர் - இன்றும் அரங்கேற்றிக் கொண்டிருப்பவர் - கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்கள் !

ஓர் இனத்தின் பெருமை, அதன் போர்த்திறத்தில் மட்டுமில்லை! அந்த இனம் கட்டிக் காத்து வரும் கலைகளின் வடிவிலும் அது காலங்களைக் கடந்து நிற்கிறது!

இதனை நன்கு உணர்ந்திருக்கும் கனிமொழி அவர்கள், பழங் கலைகளைக் காப்பாற்றுவதோடு, அந்தக் கலைஞர்களையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்! அவர்களில் சிலரை நான் சந்தித்தபோது, அவர்கள் மிகுந்த அன்போடும், நன்றி உணர்ச்சியோடும் இதனை வெளிப்படுத்தினார்கள்!

வெறுமனே வீட்டில் பொங்கல் வைப்பதோடு நின்றிருந்தால், அது பத்தோடு பதினொன்றாக முடிந்திருக்கும் ! இப்போது தெருவெல்லாம் கேட்கும் இந்தக் கலைகளின் முழக்கம், பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாய் - திராவிடப் பொங்கலாய் உயர்த்திப் பிடித்திருக்கிறது!

கலைகளையும், கலைஞர்களையும் காத்துப் போற்றி வரும் தமிழ்நாடு அரசும், அவர்களை அரவணைத்துப் போற்றும் கனிமொழி அவர்களும், என்றும் நம்முடைய மிகுந்த பாராட்டிற்கு உரியவர்கள்!

●

# ‘போகி’யாகப் போனது பா.ஜ.க!
# ‘பொங்கல்’ஆக இனித்தது தி.மு.க!

எழில். இளங்கோவன்

உண்டு மகிழ்ந்தோம், இனிப்புப் பொங்கலை! உறவோடு கூடி மகிழ்ந்தோம், தமிழ்ப் புத்தாண்டை! இரண்டும் நிறைவு பெற்றுவிட்டன! ஆனாலும் கடமைகள் நிறைவுபெறவில்லை. பணிகள் தொடர்கின்றன, காலம் குறுகிக் கிடக்கிறது, இரண்டு மாதங்கள் என.

பகாசுரனைப்போல இந்திய ஒன்றியத்தின் பெரும்பகுதிகளில் காலூன்றி நிற்கும் பாஜக, தமிழ்நாட்டிற்குள் திராவிடச் சித்தாந்தத்தைத் தாண்டி நுழைய முடியாமல் குமைந்து கொண்டு இருக்கிறது என்பது ஊரறிந்த செய்தி.

தமிழைத் தூக்கிப் பிடித்துக் காசியில் கொண்டுபோய் நிறுத்திக் காட்டுவார்கள். தமிழ்நாட்டிற்கு வந்தால் திருக்குறளைச் சொல்லிக் காட்டுவார்,

தொன்மையான தமிழைப் படிக்க முடியவில்லையே என்று வருந்துவதாகவும் நடித்துக் காட்டிக்கொள்வார், பிரதமர் மோடி.

ஒரு படி மேலேபோய் அரோகரா...அரோகரா என்று வேல் தூக்கி ஓடிக் காட்டுவார் ஒன்றிய அமைச்சர் முருகன்.

எல்லாம் பசப்புவேலைகள், தமிழ்நாட்டின் ஆட்சியைப் பிடிக்கக் காரிய நடிப்பு அது, தமிழர்கள் ஏமாந்து விடுவார்கள் என்று!

காவிகளை விரும்பமாட்டார்கள் தமிழர்கள். அவர்களின் அடையாளம் கருப்பும், சிவப்பும்!

முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது இடங்கை-வலங்கைப் போரில் கருப்பு-சிவப்பு நிற அடையாளத்தை முதல்முதலாகக் கையிலேந்திக் காட்டியவர்கள் தமிழர்கள் என்று கல்வெட்டும், ஓலைச்சுவடிகளும் சொல்கின்றன. சில ’இலைச்சறுகுகள்’ விதிவிலக்காக இருக்கலாம்.

கோயில்களுக்குச் சென்று கடவுளை வணங்கினாலும் மதத்தில் மயங்கி மதியிழக்க மாட்டார்கள் தமிழர்கள்.

சாதியற்ற சமூகம், சமூகநீதி, பெண்ணுரிமை, சமத்துவத்தைச் சொல்லித்தந்த ஐயா தந்தைபெரியாரின் கைத்தடி இன்று எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையிலன்றோ இருக்கிறது!





அது பெரியாரின் கைத்தடி, சுழற்றுகிறவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், சுழல்கிறது திராவிட மாடல் அரசு, ’மக்கள் ஆட்சியாக ’.

மகளிருக்கான முன்னேற்றத் திட்டங்கள், மாணவர்களுக்கானவளர்ச்சித்திட்டங்கள்,தொழில்மற்றும் மருத்துவத்துறைகளின் நலத்திட்டங்கள், தாயுமானவர் திட்டம், அயலகத் தமிழர்கள் நலம் பேணும் திட்டம், பள்ளிகளில் காலை உணவு, மாணவர்களுக்கு மடிகணினி வழங்கி நாட்டை உயர்வு பெறச் செய்துகொண்டிருக்கும் திராவிட மாடல் முதலமைச்சரைத் தாண்டித் தாமரை மலருமா தமிழ்நாட்டில் ? வீண்கனவு, கற்பனை!

எடப்பாடியல்ல, கடப்பாரைக்காரர்களின் சிக்கிமுக்கி வேலைகளுக்கு எல்லாம் அஞ்சுபவர்கள் அல்லர் தமிழர்கள்.

பொங்கல் அன்று இனிப்பான கரும்பு தின்றோம், திமுகழக ஆட்சி தொடரும் என்பதனால்.

போகியைக் கொண்டாடினோம், காவி, பாஜகவைத் தூக்கியெறிந்து.

பொங்கல் வைத்து, உழவைப் போற்றி, வானத்தைப் பார்த்தோம், உதித்தான் உதயசூரியன் அங்கே!

●

# அறப்போராட்டம் தொடரும்! அறிஞர் அண்ணா சூளுரை!

இதுவரை ஒன்றுபடாத தமிழர்கள் இன்று இம்மாநாட்டில் ஒன்றுகூடி இருப்பதால் இம்மாநாடு தமிழர் சரித்திரத்தில் முத்திரை பதித்தது போன்றது. பெரியார் அவர்கள், மறைமலையடிகள், நாரண துரைக்கண்ணன், சிவஞான கிராமணியார், திருவிக ஆகியவர்கள் முத்திரை மோதிரத்தின் சின்னங்கள், இலச்சினை இடவேண்டியவர்கள். எனவே, இம்முத்திரை பொறித்துப் போர் ஓலை இன்றே அனுப்பட்டும். அது அவசியம் அவிநாசியார் புரிந்துகொள்ளும் தமிழில். இருக்கட்டும்.



இந்தி நுழைவால் தமிழர் பண்பு கெட்டுப்போம். தமிழர் கலாசாரம் கெட்டுப்போம். ஆகையால் அமைச்சர் அவிநாசியாரே! அமைச்சர் குழுத்தலைவர் ரெட்டியார் அவர்களே! இவர்களை ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்திய படேல்துரை அவர்களே! ஜவகர்லால் நேரு அவர்களே! தமிழர்களாகிய நாங்கள் கட்டாய இந்தி நுழைவை எதிர்த்து அறப்போர் தொடுத்துவிட்டோம்! தொடுத்துவிட்டோம் !! தொடுத்துவிட்டோம்!!!

ஓலை எழுதப்படட்டும், அவிநாசியாரும் உடனடியாக ஜெயில்களையும் காலி செய்து வைத்துக் கொள்ளட்டும். போதுமான போலீஸ் படையையும் தயாரித்து வைத்துக் கொள்ளட்டும்.

பெரியார் அவர்கள் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள், அடக்குமுறை எப்படி இருக்கும் என்று. தடியாலும் அடிப்பார்கள், துப்பாக்கியாலும் சுடுவார்கள். பக்கிங்காமிங் தொழிலாளர் மீது அடக்குமுறை பாணத்தை வீசியவர்கள்தானே இவர்கள். இந்தத் தொழிலாளார்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்தானே நாமும்.

அடிக்கட்டும், அஞ்சோம்! சுடட்டும், அதற்கும் அஞ்சோம்! இவற்றால் ஏற்படும் தழும்புகள் திராவிடத் தனி அரசிற்கு முத்திரையாக அமையும். தலைவருக்கு நமது அஞ்சாமை பற்றி சிறிதும் சந்தேகம் இல்லை.

**“நம்மிடம் ஆயுததளவாடங்கள் ஏதும் இல்லை அவர்களை எதிர்ப்பதற்கு. எனவே நமது போர் அறப்போராகத்தான் இருக்கும். அதை அமைச்சர் விரும்பினால் ரத்தப்போராக்கலாம். ஆக்கமாட்டார் என்று நினைக்க ஆதாரம் ஒன்றுமில்லை நம்மிடம். அமைச்சர் ரத்தத்தை விரும்பினால் அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கிறோம்.”**

நமது பொறுமையைக் குறித்துத்தான் சந்தேகம். எனவேதான் அவரிடம் கொஞ்சம் தயக்கம் காணப்படுகிறது, தயக்கம் வேண்டாம்.

தமிழர்கள் எந்த அளவுக்கு உரம் படைத்தவர்களோ, அந்த அளவுக்குப் பொறுமையும் படைத்தவர்கள்தான்.

சென்ற இந்தி எதிர்ப்பின்போது தாளமுத்துவின் பிணம் ஆஸ்பத்திரியில் இருந்து சுடுகாட்டிற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது, கணக்கிலாத மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

என்ன நேருமோவென்று பார்ப்பனக் குடும்பங்கள்

அத்தனையும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருந்தன. ஆனால் என்ன நேர்ந்தது? தமிழர்கள் தாளமுத்துவின் பிணம் சாம்பலாக, சாம்பலாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பெருமூச்சு விட்டனர். ஒன்றிரண்டு பேர் கண்ணீர்த்துளி விட்டனர். அவ்வளவு மன உறுதியும், பொறுமையும் படைத்தவர்கள்தான் தமிழர்கள். எனவே அதிலும் தலைவர்க்குச் சிறுதுளியும் சந்தேகம் வேண்டாம்.

இந்தப் பஞ்ச காலத்தில் நமக்கும் அடிபட போதிய வலுவில்லை. அவர்களும் இரண்டு அடிதான் அடிப்பார்கள். அவ்வளவுதான் அவர்களுக்கும் வலுவுண்டு. நாமும் அந்த இரண்டு அடிகளிலேயே கீழே விழுந்து விடுவோம். அவ்வளவுதான் நமக்கும் தாங்கச் சக்தியுண்டு.

நம்மிடம் ஆயுததளவாடங்கள் ஏதும் இல்லை அவர்களை எதிர்ப்பதற்கு. எனவே நமது போர் அறப்போராகத்தான் இருக்கும். அதை அமைச்சர் விரும்பினால் ரத்தப்போராக்கலாம். ஆக்கமாட்டார் என்று நினைக்க ஆதாரம் ஒன்றுமில்லை நம்மிடம். அமைச்சர் ரத்தத்தை விரும்பினால் அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கிறோம்.

**(17-7-1948 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் இருந்து...)**

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மின்னுவதெல்லாம் பொன்னல்ல



"கேழ் வரகில் நெய்வடிகின்றது என்று சொன்னால், கேட்பவன் புத்தி எங்கே போனது?" என்று கிராமங்களில் கேட்பார்கள் பெரியவர்கள். அப்படித்தான் இருக்கிறது பிரதமர் மோடியின் பொங்கல் வாழ்த்து.

உலகின் பழைமையான மொழியாகிய தமிழின் தாயகமாக இந்தியா திகழ்கிறதாம், சொல்கிறார் பிரதமர் மோடி.

தமிழின் தாயகம் 'தமிழ்நாடு'தானே அல்லாமல் இந்தியா அல்ல. இந்தியா என்பது ஒருநாடே அல்ல. அது பல நாடுகள் சேர்ந்த துணைக்கண்டம் என்று அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்.

கீழடி தமிழர் நாகரிகம் காலத்தால் சமஸ்கிருதத்தை முந்தையது என்பதனால் ஒன்றிய அரசு அதனை ஏற்க மறுக்கிறது.

அதுபோல இங்கே உலகின் மிகப்பழைமையான, செம்மொழியான தமிழை இந்தியா என்ற பெயருக்குள் கொண்டுபோவது, தமிழைப் பெருமைப்படுத்த அல்ல.

இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி குறித்து கோவையைச் சேர்ந்த மறுமலர்ச்சி மக்கள் இயக்கத் தலைவர் வே.ஈஸ்வரன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டதற்கு, வெறும் 24ஆயிரம் பேர்களின் பேர்களின் பேசு மொழியான சமஸ்கிருதத்துக்கு மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் ரூபாய் 2,869 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் 8 கோடி மக்களின் தாய்மொழியான தமிழுக்கு ரூபாய் 100 கோடி மட்டுமே ஒன்றிய அரசு ஒதுக்கி உள்ளது என்று பதில் கொடுத்துள்ளது.

இதுதான் பிரதமர் மோடிக்கும் தமிழுக்கும் உள்ள பாசம்.

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

இது தேர்தல் நேரம். அதனால் பிரதமரின் வாய்மொழியில் மின்னுவதெல்லாம் பொன்னல்ல, ஒதுக்கிவிடுவோம்.

நாளைய தேர்தலில் உதயசூரியன் பொன்னாய் மின்னி வருவான்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408